உ

கடவுள் துணை.

# மதுரைசொக்கநாதர் பஞ்சரத்னம்.

# மீனாட்சியம்மன் பஞ்சரத்தினம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

உ

கடவுள் துணை.

# மதுரை சொக்கநாதர் பஞ்சரத்தினம்.

## காப்பு-வெண்பா.

போதமருமேதகுசீர் பொன்னுலவுந்தென்மதுரைக்
காதல்சொக்கநாதர் கயற்கண்ணி-மீதிரண்டு
பஞ்சரத்தினம்புகலப் பாரிற்கயமுகவன்
கஞ்சமலர்ச்செஞ்சரணங் காப்பு.

## ஆசிரியவிருத்தம்.

சந்திரசடிலப் பிரபலகங்காதரா சச்சிதானந்தமோனஞான, தற்பராவிமலசட்சமயசைதன்ய சாக்ஷாத்கார சாதுசமுக, சிந்தித சுகோதய கிர்பாசமுத்ரா சுசனசேவிதாசார்வபௌமா, சிற்சபேசாநடனபாதாம்புஜாசர்வ ஜீவகாருண்யவிமல, சுந்தராசுபகர நிரந்தராகந்தரா தூல சூட்சுமகாரண, சோமசூர்யாக்கினித் திரிநேத்ர சூத்ரா வரத சூலகரகாலகாலா, மந்திரபீஜாக்ஷா சுரூபா நிருபா மகிழ்ந்தென்னை யாளவருவாய், வளமிக்கநேசருரை யளைக்குநேர்மதுரை வளர்சொக்கநாததுரையே. (க)

நச்சரவினிற்றுயிலு மச்சகூர்மன்பநுவ னுயகியை நாவில்வைத்த, நான்முகன் காணாத சேவடியுமுடியுமளி நாணிதிகழ்வின்மதன்றன், மெச்சுமுடலைப்புழுதி செய்

தவிழியுங்கரிய மிடறுமேவலர்புரத்தை, வென்றசிறு நகையுமொளி துன்றுமழுமான்கரசமும் வியாக்ரமத்தோலினிடையும், பச்சைநிறவல்லி மீனாக்ஷியென்னன்னை வளர்பாகமுந்திகழ்தென்றிசைப், பாலகனை விழவுதைத்திட்ட பதமுங்கண்டு பரிவுகூர்ந்திட வருள்செய்வாய், வச்சிரமணிக்கனக வுச்சிதமிலங்குதிரு மாடமாளிகை துலங்கும், வளமிக்கநேசருரை யளகைககு நேர்மதுரை வளர் சொக்கநாததுரையே. (உ)

சுக்கிலசுரோணித மிரண்டினுல்வருமிந்த சோற்றுத்துருத்தியாலே, தொடர்கின்றமூவாசை மேற்கொண்டு நெஞ்சஞ் சுழன்று சுகதுக்கமதனிற், சிக்கிமண மனைவியொடு மக்கள் சுற்றங்களைச் சேர்ந்துபகலுங் கங்குலுந், தினகாலமோயா தலைந்தலைந்தே யுணவு தேடித்திரிந்து பிணியால், முக்கியமுதமு துளம் வாடியளவற்றவனமூலிகைகளைத்தின்னுமே, முடியாமல் செத்துச்செத்துப் பிறந்திடுவதே முக்கியமாமதன்வழியிலே, மக்கியழியாமனின் கொற்பதநிழற்றந்து வாழ்விப்பதெந்நாள்சொலாய், வளமிக்க நேசருரை யளகைக்கு நேர்மதுரை வளர்சொக்கநாததுரையே. (௩)

பத்திமணிமாடகூடம் பலசமைத்தென்ன பணிகள் பலசேர்த்துமென்ன, பரிமளவிசித்திர பஞ்சணையிற்றுயி

ன்றென்ன பல்லக்குகுதிரைமற்றும், அத்திமேற் பவனி வலம் வந்தென்ன நூறுநூறாயிரவிலக்கத்தின்மே, லான பொரு ளெண்ணிக்கை தவறாது பேழையி லடுக்கிவைத் தென்ன மேலும், புத்திரர்கள் பதினறு பெற்றென்னவீ தெலாம் பொய் வாழ்வெனத் தெரிந்தும், புந்தியானது பின்னு மவ்வழியிலேகிப் பொருந்திவொரு வழிபடாத, வத்தினிற் செலுமாகில் மெய்வாழ்வை யான்பெறும்வா றெந்தவா றுரைசெய்வாய், வளமிக்கநேசருரை யளகைக்குநேர்மதுரை வளர்சொக்கநாததுரையே. (ச)

பண்டடிமை கொண்டவொரு தொண்டனுக்காவந்து பரியாசுநரிகளையெலாம், பந்தியாகக்கொடுவந்து பாண்டியர்க்குத்தந்தபரிசுமொருதொண்டனூர்சொற, றண்டமிழ்க்காரூரினிற் பரவையார்பாற்றனித் தூதுசென்ற பண்பும், சங்கீத வழியிலொரு தொண்டனுக்காவிறகு தலையிற் சுமந்திட்டதும், பிண்டபிட்டுக்காக மண்சுமந்தரசன் பிரம்பா லடிப்பட்டதும், பேசுமிவ்வகைநினை யடுத்த தொண்டர்கண்மீது பிரியம்வைத் தாண்ட தென்ன, மண்டலந் தனிலெனைத் தொண்டுகொண் டருள்செயா மார்க்கமெதுவோ புகலுவாய், வளமிக்கநேசருரை யளகைக்கு நேர்மதுரை வளர்சொக்கநாததுரையே. (ரு)

கட்டளைக்கலித்துறை.

கரித்தருள்கொன்றைச் சடைமுடிச்சங்கரன் சர்ப்பவணி, பரித்தவரன்மதுரைச் சொக்கநாதரைப் பாடுதற்குத, திருத்தகு செல்வமுங் கல்வியு ஞானமுஞ் சித்தியெட்டும், வருத்தும் பவப்பிணி நீங்கிநல் வீட்டின்பம் வாய்த்திடுமே.

மதுரை சொக்கநாதர் பஞ்சரத்தினம்
முற்றிற்று.

---

உ

கடவுள் துணை

## மதுரை மீனாட்சியம்மன் பஞ்சரத்தினம்.

———(*)———

ஆசிரியவிருத்தம்.

மீனென்னதாயதன் குஞ்சென்னபிள்ளையதில் வீட்சணகடாட்சமென்ன, விழைவென்ன குழைவென்ன விதுவென்னநீயென்ன மீனாட்சியறியாததோ, தானென்னதாயிவன் றானென்னபிள்ளையென் றனையுமனையும்பழிக்குந், தவறென்ன சற்றுமட்டோவாறுமென்னவூர் தன்

னைவாய்மூடலாமோ, கானென்னசோலேயோமலேயென்ன மேடையோகடலென்னவோடையோவென், காலென்ன மரமோவென் மேலென்ன வயிரமோ கடையனே னலேய வசமோ, மானென்னமீனென்ன வாளென்ன வேலென்ன மருளவருளமரும்விழியாய், மதுரித்தமொழியிட்டு மதுரத்தைவிலேயிட்ட மதுரைக்கயற்கண்ணியே. (ரு)

எண்பத்து நான்குலட்சஞ் ஜீவபோதத்தில் யாது மொன்றுனதில்லே, என்கவி துலேப்பதுன் முப்பத்திரண்டறத் தினுமில்லே யுன்கணவனுர், பண்பெற்றவறுபத்து நான்குவிளேயாடலிற் பழிதனக்கஞ்சவில்லே, பாவியேன் செய்தபுண்ணிய மொன்றுமில்லேயென் பாடெலாம்வந்து சொல்ல, கண்பெற்றபேரிலே யுனக்குமொரு பொருளிலேக் கவனமாய்க் கேட்டொருத்தன், காதிலே சொல்லவும் வாயிலேநீசெயுங் கபடுகதையினுமில்லேயே, மண்பெற்ற மலேபெற்ற வன்னெஞ்சி கன்னெஞ்சி யென்பதனில் வழுவுமில்லே, மதுரித்தமொழியிட்டு மதுரத்தை விலேயிட்ட மதுரைக்கயற்கண்ணியே. (௬)

பழக்குண்டுவருகலிப் பாடுநின்செவியிற் படாமலிருகொப்புண்டுநீள், பார்வை வெம்போருண்டு பங்கயத் தேனுகருபாட்டளிகிடந்துகுமுற, முழக்குண்டுசெரியுஞ்

சுகந்தச்சொருக்குண்டு முத்தாணி புழுகுண்டுமால், மு ன்னிட்ட முத்து முருகுண்டு செவிமேலிட்ட முகைய விழுநீலம்விழுதே, ஞெழுக்குண்டு மகரந்த முதிருண்டு மற்றிவையொழிந்துநீ கேட்டுவிட்டா, லுன்வாயின்முத் துண்டு சிந்துண்டுபோமெந்த னுடனின்றுபேசாமலுன், வழக்குண்டு நீதியுண்டு கதியுண்டெனக்கருதி வந்திதிற் கவலையுண்டோ, மதுரித்தமொழியிட்டு மதுரத்தைவிலை யிட்ட மதுரைக்கயற்கண்ணியே (௩)

பாதத்திலேமிடமு நயனத்திலேயருளும் பகர்மொ ழியிலே யன்புமாய், பருவத்திலேவந்து பக்கத்திலேநின் று பாதத்திலே கவிதையு, நீதத்திலேமனமு நெஞ்சத்தி லேயறிவு நியமத்திலேயுரைப்பு, நேயத்திலேகனிவு மா யத்திலேமுனிவு நீதந்திடாமலே பொய், காதத்திலேநின் று கள்ளத்திலேதள்ள வுள்ளத்திலே கருதினுய், கதியெ னக்குன்னடிக்கமலத்திலேதருவ தினியெந்தகாலத்திலே மாதத்திலேயெந்தவாரத்திலேயெந்த நேரத்திலேவழங்க, மதுரித்தமொழியிட்டு மதுரத்தை விலையிட்ட மதுரைக் கயற்கண்ணியே. (௪)

தாவென்று கேட்பதுன் சாயுச்யபதமன்று சாரூப மன்றுமற்றச், சாமீபமன்றுநின் சாலோகமன்றுனதுசர ணரவிந்தமன்று, பூவன்றுவெள்ளிப் பொருப்பன்றுபொ

னுலகமன்று பொன்மலையுமன்று, புவலோகதவலோக சத்திய லோகமுமன்று பூவுலக மன்றுபற்றப், பாவன்று நாவன்றுகண்ணன்றுகா தன்றுபணமன்றுகா சன்றுகாண், பக்தஜனமென்றனைப் பணிகின்றபேரிடப் பாததூளிக்குள் தூளி, வாவென்றழைத்தென்று தருவையோவென்று தின மனமென்றமுருகவசமோ, மதுரித்தமொழியிட்டு மதுரத்தைவிலையிட்ட மதுரைக்கயற்கண்ணியே. (ரு)

கட்டளைக்கலித்துறை.

சுந்தரியே வரந்தந்தெனையாளுஞ் சுதந்தரியே
வந்தரிநான்முகனிந்திரன் மாதவர் வாழ்த்தவருள்
அந்தரிமங்கலஞ் சொக்கேசர்சூட்ட வழகுபொலி
கந்தரிபல்வளமோங்கு மதுரைக் கயற்கண்ணியே.

மதுரை மீனாட்சியம்மன் பஞ்சரத்தினம்

முற்றிற்று.